# யாழ் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்புப் போராட்டம் தொடர்கிறது!

இந்திய மீனவர்களின் அத்துமீறிய செயற்பாட்டை கண்டித்து யாழ் மாவட்ட மீனவர்கள் முன்னெடுத்துள்ள உணவு தவிர்ப்புப் போராட்டம் மூன்றாவது நாளாகவும் தொடர்கின்றது.

யாழ் மாவட்ட கிராமிய கடற்தொழில் அமைப்புக்களின் சம்மேளனமும், யாழ் மாவட்ட கடற் தொழில் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளனமும் இணைந்து கடந்த 19 ஆம் திகதி காலை முதல் யாழ்ப்பாணம் புனித ஜோன் பொஸ்கோ வித்தியாலயத்திற்கு முன்பாக உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

செல்லத்துரை நற்குணம், அன்ரன் செபராசா, சின்னத்தம்பி சண்முகராஜா மற்றும் அந்தோணிப்



## ஒருவரின் நிலை கவலைக்கிடம்

பிள்ளை மரியதாஸ் ஆகிய நான்கு மீனவர்களே உணவு தவிர்ப்புப் போராட்டத்தில் மூன்றாவது நாளாகவும் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களில் ஒருவரின் உடல் நிலை தற்போது கவலைக்கிடமாக உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த மீனவர்களின் உணவு தவிர்ப்புப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து இன்றையதினம் யாழ் தையிட்டி அன்னை வேளாங்கணி கடற்றொழில் சங்கத்தினர் கலந்து கொண்டுள்ளனர். (01)


மாலைக்கதிர்
Maalaikkathir








சாயல் - 02 வள்ளுவர் ஆண்டு 2055 பங்குனி 08 வியாழக்கிழமை 21.03.2024 கதிர் 209


## கோப் குழுவில் இருந்து டிலான் எம்.பியும் விலகல்



கோப் எனப்படும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேராவும் விலகியுள்ளார். 2➤

## மொட்டு கட்சியின் அடுத்த கட்ட அரசியல் நடவடிக்கைகள் மே தின ஊர்வலத்தின் பின்னர் ஆரம்பிக்கப்படத் திட்டம்!

### பஸிலுடன் பேசப்பட்டதாக சஞ்சீவ எதிரிமான்ன எம்.பி. தெரிவிப்பு



ஶ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் (மொட்டு) அடுத்த அரசியல் நடவடிக்கைகளை மே தின ஊர்வலத்துடன் ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அக்கட்சியின் களுத்துறை மாவட்ட உறுப்பினர் நாடாளுமன்ற சஞ்சீவ எதிரிமான்ன தெரிவித்துள்ளார்.

பொதுஜன முன்னணியின் தேசிய அமைப்பாளர் பசில் ராஜபக்வுடன் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபைகள் மற்றும் தொழிற்சங்க தலைவர்கள் ஆகியோர் லோட்டஸ் வீதியிலுள்ள கட்சியின் அலுவலகத்தில் நேற்று சந்தித்துள்ளனர்.

நடைபெறக்கூடிய நாடாளுமன்ற தேர்தல் பற்றியோ அல்லது ஜனாதிபதி தேர்தல் பற்றியோ இங்கு 2➤

## அத்துமீறிய தமிழக மீனவர்களின் படகை மீட்க வந்த படகின் உரிமையாளர் சிறையில் அடைப்பு

இலங்கையில் பிடிபட்ட தமிழக மீனவர்களின் படகை மீட்க, அங்கிருந்து விமானம் மூலம் இலங்கைக்கு வந்த படகின் உரிமையாளரும் சிறையில் அடைக்கப்பட்டார்.

மன்னார் கடற்பரப்புக்குள் இந்த ஆண்டு ஜனவரி மாதம் எல்லை தாண்டி மீன்பிடித்த வேளை கடற்படையினரால் கைது செய்யப்பட்டு மீன்பிடித் திணைக்கள அதிகாரிகள் மூலம் நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட தமிழக மீனவர்கள் பின்னர் விடுவிக்கப்பட்டிருந்தனர். அவர்களின் படகுகள் நீதிமன்ற உத்தரவில் தடுத்து வைக்கப்பட்டிருந்தன. அந்தப் படகுகளுக்கான விசாரணை நேற்றைய தினத்துக்குத் (20) திகதியிடப்பட்டிருந்தது.

இவ்வாறு திகதியிடப்பட்ட இரு படகுகளின் வழக்கு விசாரணை நேற்று இடம்பெற்ற சமயம் படகுகளை மீட்டுச் செல்லும் நோக்கில் உரிமையாளர்கள் இருவரும் சட்டத்தரணிகள் மூலம் மன்னார் நீதிமன்றில் பிரசன்னமாகினர்.

முதல் படகின் வழக்கு முதலில் எடுக்கப்பட்டது. வழக்கு விசாரணை இன்றைய தினத்துக்கு ஒத்தி வைக்கப்பட்டது. அதேசமயம், மன்றில் பிரசன்னமான படகின் உரிமையாளரை இன்றைய தினம் வரை விளக்கமறியலில் வைக்குமாறும் மன்னார் நீதிமன்றம் கட்டளையிட்டது.

இதற்கமைய தமிழகம், இராமநாதபுரம், பாம்பனைச் சேர்ந்த படகு உரிமையாளர் வவுனியா சிறையில் அடைக்கப்பட்டுள்ளார்.

இராமநாதபுரம், பாம்பன் 2➤

## மகாவலி திட்டத்தில் கைவிடப்பட்ட ஏ, பி வலயங்களில் துரித அபிவிருத்தி

### ஜனாதிபதி உறுதி



நாட்டை நவீன விவசாயப் பொருளாதாரத்தை நோக்கி நகர்த்தும் பயணத்தின் போது, மகாவலி திட்டத்தில் கைவிடப்பட்ட ஏ, பி வலயங்களை விரைவாக அபிவிருத்தி செய்து அதன் பலனை மக்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்தார்.

இந்த நாட்டின் நீர்ப்பாசன வரலாற்றில் தனித்துவமான மாற்றத்தை ஏற்படுத்திய, மகாவலி திட்டதை காமினி திஸநாயக்க செயற்படுத்தியிருக்காவிடின் இன்று நாடு அரிசியில் தன்னிறைவு அடைந்திருக்காது எனவும், நாட்டுக்கு அவசியமான மின்சாரத்தைப் பெற முடியாமல் போயிருக்கும் எனவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

மறைந்த முன்னாள் அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் 82 ஆவது ஜனன தின நிகழ்வில் நேற்று (20) கலந்துகொண்டிருந்தபோதே 2➤

## செயற்குழுக் கூட்டத்தில் மாஸ்க் அணிந்தவாறு வாய் பேசாமல் மௌனம் காத்த பொன்சேகா

### ஐ.ம. சக்திக்கு ஆதரவு பெருகியுள்ளது – அலவத்துவல எம்.பி.

எதிர்வரும் நாட்களில் நடைபெறக்கூடிய எந்தவொரு தேர்தலையும் பலத்துடன் எதிர்கொள்ளும் வகையில் விரிவான வேலைத் திட்டமொன்றை நடைமுறைப்படுத்த ஐக்கிய மக்கள் சக்தி கட்சியின் செயற்குழு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐக்கிய மக்கள் சக்தியின் செயற்குழு நேற்று முன்தினம் (19) பிற்பகல் 2➤



## சுங்க தொழிற்சங்க நடவடிக்கை முடிவடைந்த போதிலும் கொள்கலன் செயல்பாடுகள் வழமைக்கு திரும்பவில்லை!

### சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அமில சஞ்சீவ தெரிவிப்பு

இலங்கை ஒன்றிணைந்த சுங்க தொழிற்சங்க கூட்டமைப்பினால் ஆரம்பிக்கப்பட்ட தொழிற்சங்க நடவடிக்கை முடிவுக்கு வந்துள்ள போதிலும் கொள்கலன் செயல்பாடுகள் வழமையாக நடைபெற சுமார் நான்கு நாட்கள் ஆகும் என சுங்க அதிகாரிகள் சங்கத்தின் தலைவர் அமில சஞ்சீவ தெரிவித்துள்ளார்.

சுங்கத்திலிருந்து விடுவிக்க 5000 கொள்கலன்கள் தயார் நிலையில் உள்ளதாகவும், சுங்க களஞ்சியங்களில் உள்ள கொள்கலன்களுக்கு தாமதக் கட்டணம் வசூலிக்கப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனினும், துறைமுகத்திலும் தனியார் நிறுவனங்களுக்குச் சொந்தமான இடங்களிலும் உள்ள கொள்கலன்களுக்கு தாமதக் கட்டணம் அறவிடப்படும் 2➤


- பக்கம் சாராச் செய்திகளுடன் மக்களுக்கான மாலை இதழ் -

# ஐந்து விசைப்படகுகளுடன் 32 இந்திய மீனவர்கள் கைது

இலங்கைக் கடற்பரப்புக்குள் எல்லை தாண்டி நுழைந்து மீன்பிடித்த 32 இந்திய மீனவர்களை ஐந்து விசைப்படகுகளுடன் இலங்கைக் கடற்படை பிடித்துள்ளது.

தமிழக மீன்பிடித் துறைமுகங்களில் இருந்து மீன்பிடிக்கச் சென்று நெடுந்தீவுக் கடற்பரப்பில் மீன் பிடித்துக் கொண்டிருந்த மூன்று படகுகளைக் கைப்பற்றி அதிலிருந்த 25 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து காங்கேசன்துறை கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

மேலும் மன்னார் கடற்பரப்பில் மீன்பிடித்துக் கொண்டிருந்த இரண்டு விசைப்படகுகளையும் கைப்பற்றியதோடு, அதிலிருந்த 7 மீனவர்களையும் இலங்கைக் கடற்படையினர் கைது செய்து மன்னார் கடற்படை முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

அவர்கள் மீன்வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்படவுள்ளனர். (அ)

# ரவி கருணாநாயக்க யாழிற்கு விஜயம்

*முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க இன்று யாழ்ப்பாணத்திற்கு விஜயத்தை மேற்கொண்டிருந்தார்.*

*இதன்போது இன்று காலை 11 மணிக்கு யாழ்ப்பாணம் ஆயர் இல்லத்தில் யாழ் மறைமாவட்ட ஆயர் பேரருட்தந்தை யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசம் ஆண்டகையை சந்தித்து கலந்துரையாடியிருந்தார்.*

*அதன் பின்னர் முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க ஊடகவியலாளர்களையும் சந்தித்திருந்தார்.*



## செயற்குழுக் கூட்டத்தில்...

கூடியதுடன், அதன் தலைவர் சரத் பொன்சேகா 'மாஸ்க்' ஒன்றை அணிந்தவாறு, அங்கு எதுவுமே பேசாமல் மௌனமாக நடப்பவற்றை அவதானித்துக் கொண்டு மாத்திரம் இருந்ததாகவும் தெரியவருன்கிறது.

மேற்படி செயற்குழுக் கூட்டம் குறித்து ஐக்கிய மக்கள் சக்தியின் அலவத்துவல எம்.பி. தெரிவிக்கையில், "இந்த வருடம் ஜனாதிபதி தேர்தல் நடைபெற வேண்டியுள்ளது. இந்நிலையில் எதிர்வரும் எந்தவொரு தேர்தலையும் எவ்வாறு எதிர்கொள்வது என்பது குறித்து செயற்குழுவில் ஆலோசிக்கப்பட்டது. அடுத்த அரசாங்கத்தை அமைப்பதற்கான வெற்றிப் பாதையில் நாம் கட்சியை கொண்டு செல்வோம். செயற்குழுவிலிருந்த அனைவரும் அதற்கு ஒப்புதல் வழங்கினர். நடைபெறக்கூடிய எந்தவொரு தேர்தலையும் மிகுந்த பலத்துடன் எதிர்கொள்வோம். தற்போதைய நிலவரத்தின் படி மக்கள் ஆதரவில் ஐக்கிய மக்கள் சக்தி முன்னணியில் உள்ளது என்பதை ஆய்வுகள் தெளிவுபடுத்தியுள்ளன" என்றார். (ரெம-69)

## சுங்க தொழிற்சங்க ...

விடயத்தில் தாம் தலையிட முடியாது எனவும், வாகன இறக்குமதி நிறுத்தப்பட்ட போதிலும் 2023 ஆம் ஆண்டில் சுங்கவரி மூலம் 870 பில்லியன் வரி வருமானத்தை வசூலிக்க இலக்கு நிர்ணயிக்கப்பட்ட போதிலும் 978 பில்லியன் வசூலிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

சுங்க பரிசுத் தொகை தொடர்பில் நிதி அமைச்சினால் எடுக்கப்பட்ட தீர்மானத்திற்கு எதிராக தொழிற்சங்க நடவடிக்கையொன்று ஆரம்பிக்கப்பட்டதாகவும், இருப்பினும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டியவுடன் இடம்பெற்ற கலந்துரையாடலையடுத்து மேற்படி தொழில் சங்க நடவடிக்கையை இம்மாதம் 31 ஆம் திகதி வரை ஒத்திவைக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-70)

## மொட்டு கட்சியின்...

பேசப்படவில்லை எனவும், எதிர்வரும் மே தினத்தின் போது மே தின ஊர்வலத்தை மிகப் பிரமாண்டமாக நடத்துவது தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

பெருமளவு மக்களின் பங்களிப்புடன் மேற்படி மே தின ஊர்வலத்தை நடத்தி அடுத்த கட்ட தேர்தல் நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்கான வீச்சை ஏற்படுத்தவது தொடர்பில் தீர்மானிக்கப்பட்டதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ரெம-68)

## அத்துமீறிய தமிழக.....

பகுதியைச் சேர்ந்த அன்ரன் என்பவரே விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

இதேநேரம் இரண்டாவது படகின் உரிமையாளரும் நீதிமன்றத்துக்கு வருகை தந்தபோதும் முதலாம் வழக்கின் உரிமையாளருக்கு விளக்கமறியல் உத்தரவு வழங்கப்பட்ட நிலையைக் கருத்திலகொண்டு மற்றைய வழக்கில் மன்றில் முன்னிலையாகாமல் தவிர்த்து, அவர் வெளியேறிவிட்டார். (அ)

## கோப் குழுவில் ...

கோப் குழுவின் தலைமைப் பதவிக்கு மொட்டுக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ரோஹித அபேகுணவர்தன நியமிக்கப்பட்டுள்ளமைக்கு தெரிவித்து நேற்று வரை 10 எதிரணி எம்.பிக்கள் மேற்படி குழுவில் இருந்து விலகியுள்ளனர்.

இந்நிலையிலேயே எதிரணி எம்.பி. டிலான் பெரேரா இன்று கோப் குழுவில் இருந்து பதவி விலகியுள்ளார்.

இதுவரை மொத்தமாக 11 எதிரணி எம்.பிக்கள் கோப் குழுவில் இருந்து விலகியுள்ளனர்.

அதற்கமைய நாடாளுமன்ற உறுப்பினர்களான எரான் விக்கிரமரத்ன, தயாசிறி ஜயசேகர, சரித ஹேரத், இரா.சாணக்கியன், ஹேஷா விதானகே, காமினி வலேபோட, எஸ்.எம். மரிக்கார், வசந்த யாப்பா பண்டார, துமிந்த திஸாநாயக்க, அநுரகுமார திஸாநாயக்க, டிலான் பெரேரா ஆகியோர் கோப் குழுவில் இருந்து விலகியுள்ளனர். (அ)

## மகாவலி திட்டத்தில்....

ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

கொழும்பு ஆனந்த குமாரசுவாமி மாவத்தையில் அமைந்துள்ள காமினி திஸாநாயக்கவின் சிலைக்கு முன்பாக இந்த நிகழ்வு இடம்பெற்றது.

காமினி திஸாநாயக்கவின் கடந்த கால நினைவுகளை நினைவு கூர்ந்த ஜனாதிபதி, அன்னாரின் அர்ப்பணிப்பு அனைவருக்கும் முன்னுதாரணமாகும் என்றும் கூறினார்.

இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காமினி திஸாநாயக்கவின் சிலைக்கு மலர் அஞ்சலி செலுத்தினார்.

இந்த நிகழ்வில் காமினி திஸாநாயக்க மன்றத்தின் உப தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் மயந்த திஸாநாயக்க வரவேற்புரை ஆற்றினார்.

இங்கு கருத்துத் தெரிவித்த முன்னாள் சபாநாயகர் கரு ஜயசூரிய, காமினி திஸாநாயக்கவின் பாத்திரம் ஓர் அரசியல் முன்னுதாரணம் என்று குறிப்பிட்டார்.

மக்களுக்கு சேவை செய்வதன் மூலம்தான் அவர் பிரபலமடைந்தார் எனச் சுட்டிக்காட்டிய கரு ஜயசூரிய, அவரின் சரியான முகாமைத்துவம் இலங்கையை துரிதமாக அபிவிருத்தி செய்ய உதவியது என்றும் குறிப்பிட்டார்.

சப்ரகமுவ மாகாண ஆளுநரும் காமினி திஸாநாயக்க மன்றத்தின் தலைவருமான நவின் திஸாநாயக்க உரையாற்றுகையில், ஐக்கிய தேசியக் கட்சியின் முன்னாள் தலைவர் என்ற ரீதியில், ஐக்கிய தேசியக் கட்சியின் பொருளாதார முறை நாட்டுக்கு ஏற்றது என தனது தந்தை எப்போதும் கூறி வந்தார் என்று தெரிவித்தார்.

எதிர்காலத்திலும் நடுநிலையான வலதுசாரி இயக்கம் உருவாகும். அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் அவ்வாறானதொரு தலைவர் மக்களால் தெரிவு செய்யப்படுவார் என எதிர்பார்க்கின்றேன் என்றும் அவர் மேலும் கூறினார்.

இந்த நிகழ்வில், அமைச்சர் கலாநிதி விஜயதாஸ ராஜபக்ஷ, இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார், தேசிய பாதுகாப்பு தொடர்பான ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகரும் ஜனாதிபதியின் பணிக்குழாம் பிரதானியுமான சாகல ரத்நாயக்க, நாடாளுமன்ற உறுப்பினர்களான ரஞ்சித் மத்தும பண்டார, ராஜித சேனாரத்ன, வடிவேல் சுரேஷ், முன்னாள் அமைச்சர் ரவி கருணாநாயக்க, முன்னாள் இராஜாங்க அமைச்சர் சம்பிகா பிரேமதாஸ, ஜனாதிபதியின் தொழிற்சங்க விவகாரப் பணிப்பாளர் நாயகம் சமன் ரத்னப்பிரிய உட்பட பல அரசியல் பிரதிநிதிகள் மற்றும் காமினி திஸாநாயக்கவின் குடும்ப உறுப்பினர்கள் கலந்துகொண்டனர். (அ)




செய்திகளையும் இன்னும் பல காணொளிகளையும் பார்வையிட
காலைக்கதிர் TV
காலைக்கதிர் TV YouTube தளம்

உங்கள் பிரதேசத்து நிகழ்வுகள் பற்றிய விபரங்களை எமக்கு அனுப்பிட
maalaikkathir@gmail.com

# திருக்கோவில் ஆதார வைத்தியசாலையின் அனைத்து வைத்தியர்களையும் தற்காலிகமாக இடம் மாற்றுக!

## அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் வேண்டுகோள்




(வி.ரி. சகாதேவராஜா)

திருக்கோவில் ஆதார வைத்தியசாலையில் உள்ள அனைத்து வைத்திய அதிகாரிகளையும் அவர்கள் பாதுகாப்புக் கருதி வேறிடத்துக்குத் தற்காலிகமாக இடமாற்றுமாறு அரச வைத்திய அதிகாரிகள் சங்கம் சுகாதார அமைச்சின் செயலாளரை கேட்டுக் கொண்டிருக்கின்றது.

சுகாதார அமைச்சரின் செயலாளர் டொக்டர் அசேல குணவர்தனவுக்கு அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் பொதுச் செயலாளர் டொக்டர் ஹரித அலுத்கே கடிதத்தை அனுப்பி வைத்திருக்கிறார்.

அங்குள்ள எட்டு மருத்துவ அதிகாரிகளையும் அக்கரைப்பற்று பொத்துவில் கல்முனை மற்றும் அம்பாந்தோட்டை பிலியந்தல பியகம ஆகிய இடங்களுக்கு தற்காலிகமாக இடமாற்றுமாறு அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

அண்மையில் அங்கு ஏற்பட்ட அசாதாரண சம்பவம் காரணமாக வைத்திய அதிகாரிகள் கடந்த 12 நாட்களாக பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டு வருகின்றனர். அதனால் வைத்திய சாலை நடவடிக்கைகள் முற்றாக செயலிழந்துள்ளன.

அதன் காரணமாக பொதுமக்கள் பெரும் அசௌகரியத்துக்கு உள்ளாகியுள்ளனர்.

கடந்த இரு நாட்களாக பல தரப்பட்ட பேச்சு வார்த்தைகளும் கூட்டங்களும் இடம் பெற்ற போதிலும் வைத்திய சாலை இன்னும் திறக்கப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

# சுகாதாரப் பணிமனையினால் பாதுகாப்பு காலணிகள் அன்பளிப்பு

(அஸ்லம் எஸ்.மௌலானா)

கல்முனை மாநகர சபை சுகாதாரத் தொழிலாளர்களின் நலன்கருதி ஒரு தொகை களப்பாதுகாப்பு காலணிகளை கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனை வழங்கி வைத்துள்ளது.

இவற்றை கல்முனை மாநகர ஆணையாளர் ஏ.எல்.எம். அஸ்மி அவர்களிடம் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஷகீலா இஸ்ஸதீன் இன்று வியாழன் (21) கையளித்தார்.

இந்நிகழ்வில் பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையின் பொதுச் சுகாதாரத்துறை பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் ஷாபி, மாநகர சபையின் உதவி ஆணையாளர் ஏ.எஸ்.எம். அஸீம், சுகாதாரப் பிரிவு அபிவிருத்தி உத்தியோகத்தர் எம்.எம்.எம். பயாஸ், களஞ்சியப் பொறுப்பாளர் கே. மகேந்திர ராஜா ஆகியோரும் பங்கேற்றிருந்தனர்.



கல்முனை மாநகர சபையினால் முன்னெடுக்கப்படும் திண்மக்கழிவகற்றல் சேவையில் ஈடுபடும் ஊழியர்களின் பாதுகாப்பையும் சுகாதார நலன்களையும் கருத்தில் கொண்டு அவர்களது நலத் திட்டத்திற்கு உதவுமாறு மாநகர ஆணையாளர் விடுத்த வேண்டுகோளுக்கு அமைவாக இப்பாதணிகளை வழங்க பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் நடவடிக்கை எடுத்திருந்தார்.




# தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களுக்கு செயலமர்வு



(எம்.ஏ.ஏ.அக்தார்)

இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் மற்றும் பொது நலவாய மன்றம் ஆகியன இணைந்து நடாத்திய தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பாக அரச உத்தியோகத்தர்களை வலுப்படுத்தும் செயலமர்வு மட்டக்களப்பில் இடம்பெற்றது.

இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தின் பணிப்பாளர் சட்டத்தரணி அசாத் முஸ்தபா அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டல்களுக்கு அமைவாக, மட்டக்களப்பு கல்லடி தனியார் விடுதியில் இடம்பெற்ற நிகழ்வினை இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றத்தின் சிரேஷ்ட உத்தியோகத்தர் எம்.பஸ்லானின் நெறிப்படுத்தலில் இடம்பெற்ற நிகழ்விற்கு பிரதம அதிதியாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.ஜஸ்டினா முரளிதரன் கலந்து சிறப்பித்துள்ளார்.

தகவல் அறியும் உரிமைச் சட்டம் தொடர்பான வழிகாட்டல்கள் இதன் போது வழங்கப்பட்டதுடன், தகவல் வழங்கும் உத்தியோகத்தர்களின் கடந்த கால அனுபவங்கள் பகிரப்பட்டதுடன், குறித்த துறை சார்ந்த சவால்கள் மற்றும் சாதக, பாதக நிலை தொடர்பிலும் இதன் போது விரிவாக விவாதிக்கப்பட்டது.

இச்செயலமர்விற்கு பிரதான வளவாளராக விடியல் பத்திரிகையின் பணிப்பாளர் ரிப்தி அலி கலந்து கொண்டு வளவாண்மை மேற்கொண்டுள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் குறித்த செயலமர்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன், இச்செயலமர்வுகளில் சுமார் 100 இற்கு மேற்பட்ட அரச உத்தியோகத்தர்கள் உள்வாங்கப்பட்டு, செயலமர்வுகள் இடம்பெற்று வருகின்றன.

ஊடகம் மற்றும் சமூகம் சார்ந்த செயற்பாடுகளில் சுமார் 15 வருட காலமாக இலங்கை அபிவிருத்தி ஊடகவியலாளர் மன்றம் செயற்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதியின் காஸா குழந்தைகள் நிதியத்துக்கு கிழக்கு மாகாண ஆளுநர் நிதி வழங்கி வைத்தார்



(நூருல் ஹுதா உமர்)

காஸாவில் இடம்பெற்றுவரும் மோதல்களில் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு இப்தார் மாதத்தில் நிவாரணம் வழங்குவதற்காக ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவினால் ஆரம்பித்து வைக்கப்பட்ட ஜனாதிபதி காஸா நிதியத்திற்கு கிழக்கு மாகாண ஆளுநரும், இலங்கை தொழிலாளர் காங்கிரசின் தலைவருமான செந்தில் தொண்டமான் 5 இலட்சம் ரூபா நிதியை வழங்கியுள்ளார்.

காஸா குழந்தைகள் நிதியத்துக்கு இதுவரை 57 இலட்சத்து 73 ஆயிரத்து 512 ரூபா நன்கொடையாக கிடைக்கப்பெற்றுள்ளது. குறித்த நிதி விரைவில் காஸாவில் பாதிக்கப்பட்டுள்ள குழந்தைகளின் நலன்புரி தேவைகளுக்காக இலங்கை அரசாங்கத்தால் அனுப்பிவைக்கப்பட உள்ளது.

வர்த்தகர்கள், பொது அமைப்புகள் உட்பட பல்வேறு தரப்பினரும் இந்த நிதியத்துக்கு உதவிகளை வழங்கிவரும் நிலையில், கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் முதல் அரசியல் தலைமையாக இந்நிதியை வழங்கியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.

# ஐரோப்பிய நாடுகளில் முடக்கப்பட்டுள்ள ரஷ்யாவின் சொத்துக்கள் அவற்றின் வருமானத்தை உக்ரைனுக்கு அளிப்பது திருட்டுச் செயல்!

## ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் கண்டனம்



ஐரோப்பிய நாடுகளில் முடக்கப்பட்டுள்ள தங்களது சொத்துகள் மூலம் கிடைக்கும் வருமானத்தை உக்ரைனுக்கு அளிப்பது திருட்டுச் செயலுக்கு சமமாகும், என்று ரஷ்யா கண்டனம் தெரிவித்துள்ளது.

ரஷ்யாவுடனான போரில் உக்ரைனுக்கு ஆதரவு தெரிவிக்கும் மேற்கத்திய நாடுகள், அந்த நாட்டுக்கு ஆயுதங்கள் மற்றும் நிதியுதவி அளித்துவருகின்றன. இந்த நிலையில், உக்ரைன் போர் விவகாரத்தில் ஐரோப்பிய நாடுகள் முடக்கிவைத்துள்ள ரஷ்ய சொத்துகள் மூலம் கிடைக்கும் வருமானத்தை உக்ரைனுக்கு நிதியுதவியாக அளிக்கும் திட்டத்தை ஐரோப்பிய ஒன்றியத்தின் வெளியுறவுத் துறை அமைச்சர் ஜோசப் போரல் பரிந்துரைத்துள்ளார்.

இது குறித்து ரஷ்ய அரசின் செய்தித் தொடர்பாளர் டிமித்ரி பெஸ்கோவ் நேற்று புதன்கிழமை கருத்துத் தெரிவித்தபோது, ஐரோப்பிய நாடுகளில் ரஷ்யா முதலீடு செய்துள்ள சொத்துகளில் இருந்து கிடைக்கும் 90 சதவீத வருமானத்தை ரஷ்யாவுக்கு எதிரான போரில் பயன்படுத்த உக்ரைனுக்கு அளிக்க ஐரோப்பிய ஒன்றியம் திட்டமிட்டு வருகிறது. அத்தகைய செயல், அடுத்தவர்களது சொத்துகளைத் திருடுவதற்கும், கொள்ளையடிப்பதற்கும் இணையானது ஆகும்.

அந்தத் திட்டம் செயல்படுத்தப்பட்டால், சொத்துகளை பாதுகாப்பாக முதலீடு செய்வதற்கு ஏற்ற இடம் என்ற பெயரை ஐரோப்பிய நாடுகள் இழந்துவிடும். அது, அந்த நாடுகளின் பொருளாதாரத்தைக் கடுமையாக பாதிக்கும், என்று எச்சரித்தார்.

நேட்டோவில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்பு தெரிவித்து, அந்த நாட்டின் மீது ரஷ்யா கடந்த 2022 பெப்ரவரி மாதம் படையெடுத்து, கிழக்கு மற்றும் தெற்கு உக்ரைனைச் சேர்ந்த 4 பிரதேசங்களின் கணிசமான பகுதிகளைக் கைப்பற்றியுள்ளது.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வரும் அமெரிக்கா உள்ளிட்ட மேற்கத்திய நாடுகள், உக்ரைனுக்கு ஆயுத மற்றும் நிதியுதவிகளை அளித்து வருகின்றன. இருந்தாலும், உள்ளூர் அரசியல் மற்றும் பொருளாதாரச் சூழல் காரணமாக உக்ரைனுக்கு தொடர்ந்து நிதியளிப்பதில் அந்த நாடுகள் பின்னடைவைச் சந்தித்து வருவதாகக் கூறப்படுகிறது. (04)

# 2024 பாரிஸ் ஒலிம்பிக்ஸ் போட்டிகளில் ரஷ்யா – பெலாரஸ் வீரர்களுக்கு சிக்கல்



பாரிஸில் ஜூலை மாதம் நடைபெறவிருக்கும் 2024 ஒலிம்பிக்ஸ் போட்டிகளின் தொடக்க அணிவகுப்பில் ரஷ்யா மற்றும் பெலாரஸ் நாடுகளின் விளையாட்டு வீரர்கள் பங்கேற்க மாட்டார்கள் என சர்வதேச ஒலிம்பிக்ஸ் குழு தெரிவித்துள்ளது.

இரு நாடுகளில் இருந்தும் 2024 ஒலிம்பிக் போட்டிகளுக்கு தேர்வானவர்கள், நாட்டின் கொடி மற்றும் தேசிய கீதம் இல்லாமல் சுயேட்சையான வீரர்களாக கலந்துகொள்ள அனுமதிக்கப்படுவார்கள் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

2022 இல் உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததன் பின்விளைவாக இந்த முடிவை ஒலிம்பிக்ஸ் குழு எடுத்துள்ளது.

இந்த முறை சென் ரிவர் பகுதியில் ஒலிம்பிக் அணிகள் பங்கேற்கும் அணிவகுப்பு நடைபெறவுள்ளது. 3 லட்சத்துக்கும் அதிகமான பார்வையாளர்கள் பங்கேற்பார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

நாடுகள் சாராத தனிப் போட்டியாளர்களாக ரஷ்யா மற்றும் பெலாரஸ் வீரர்கள் பங்கேற்பார்கள் எனவும் அவர்களுக்கு தனியாக உருவாக்கப்பட்ட கொடியும் கீதமும் இசைக்கப்படும் எனவும், அணிவகுப்பு தவிர்த்து மற்ற தொடக்க நிகழ்வுகளில் அவர்கள் பங்கேற்பார்கள் என்றும் குழு தெரிவித்துள்ளது.

ரஷ்யாவின் ஒலிம்பிக் பங்கேற்பை எதிர்த்து வரும் பாரிஸ் மேயர் அன்னே ஹிடால்கோ, ஒலிம்பிக்ஸ் குழுவின் இந்த அறிவிப்பை வரவேற்றுள்ளார். (04)

# அயர்லாந்து பிரதமர் திடீரென ராஜினாமா!



இந்திய வம்சா வளியைச் சேர்ந்த அயர்லாந்து பிரதமர் லியோ வராத்கர் தனது பதவியை ராஜினாமா செய்வதாக திடீரென அறிவித்துள்ளார்.

தனிப்பட்ட மற்றும் அரசியல் காரணங் களுக்காக பதவி வில குவதாக அவர் எதிர்ப ாராத நேரத்தில் அறிவித்துள்ளது நாட்டில் அதிர்ச்சி அலையை ஏற்படுத்தியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இது குறித்து லியோ வராத்கர் வெளியிட்டுள்ள அறிக்கையில், பிரதமர் பதவியிலிருந்து விலக முடிவு செய்துள்ளேன். இந்த இடத்துக்கு என்னைவிட தகுதியான ஒருவர் நியமிக்கப்படுவார். எனது இந்த ராஜினாமா முடிவுக்கு தனிப்பட்ட மற்றும் அரசியல் காரணங்கள் உள்ளன. அதில் அரசியல் காரணங்கள்தான் அதிகம்.

பல ஆண்டுகளாக பிரதமர் பதவியை வகித்துவிட்டேன். இதற்கு மேலும் இந்தப் பொறுப்புக்கு பொருத்தமான நபராக என்னை நான் கருதவில்லை. எனக்கு நெருக்கமானவர்களும், விசுவாசமானவர்களும் உள்ளூர் மற்றும் ஐரோப்பிய தேர்தல்களில் போட்டியிடவுள்ளனர். அவர்களுக்கு மிகச் சிறந்த வாய்ப்புகளை அளிக்கவே நான் பதவி விலகுகிறேன்.

தனிப்பட்ட முறையில், அயர்லாந்தின் பிரதமராக இருந்தது மிக மகிழ்ச்சியான அனுபவமாக இருந்தது. இருந்தாலும், அரசியல்வாதிகளும் மனிதர்கள்தான். அவர்களது திறனுக்கும் ஓர் எல்லை உண்டு. அந்த எல்லைக்கு மேல் பதவியை விட்டுக்கொடுத்து நகரவேண்டும். தற்போதைய நிலையில் எனது எதிர்காலம் குறித்து எந்த திட்டமும் இல்லை. இது குறித்து பிறகு சிந்திப்பேன், என்று தெரிவித்துள்ளார்.

45 வயதாகும் லியோ வராத்கர் மும்பையிலிருந்து வந்த தந்தைக்கும், அயர்லாந்து தாய்க்கும் பிறந்தவர். அவரது தலைமையிலான "ஃபைன் கேயல்' கட்சி அயர்லாந்தில் கடந்த 2017 ஆம் ஆண்டு முதல் ஆட்சி செலுத்தி வருகிறது. அயர்லாந்து பிரதமராக 2017 முதல் பொறுப்பு வகித்த வராத்கர், 2020 இல் நடைபெற்ற தேர்தலுக்குப் பிறகு மைக்கேல் மார்ட்டினின் கட்சியுடன் இணைந்து கூட்டணி ஆட்சி அமைத்தார். அதற்காக மார்ட்டினும், வராத்கரும் சுழற்சி முறையில் பிரதமர் பதவியை வகிக்க ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது.

அதன்படி 2020-லிருந்து 2 ஆண்டுகளுக்கு நாட்டின் பிரதமராக மைக்கேல் மார்ட்டின் இருந்தார். பின்னர் கூட்டணி ஒப்பந்தத்தின் கீழ் அவர் 2022 ஆம் ஆண்டு பதவி விலகியதையடுத்து லியோ வராத்கர் மீண்டும் பிரதமர் பொறுப்பை ஏற்றார்.

ஆனால், அவரது ஆட்சியில் அயர்லாந்து அரசியல் சாசனத்தில் "குடும்பம்' என்ற வார்த்தையைத் திருமணத்துக்கு அப்பாற்பட்ட உறவுக்கும் விரிவுபடுத்துவது, "பெண்களின் கடமைகளில் குறிப்பிடப்பட்டுள்ள ஆணாதிக்க அம்சங்களை நீக்குவது ஆகிய இரு விவகாரங்களில் பொதுமக்களின் அனுமதியை கேட்பதற்கான பொது வாக்கெடுப்பு நடத்தப்பட்டது. அந்த இரு வாக்கெடுப்புகளிலும் அரசியல் சாசனத்தில் சீர்திருத்தம் செய்வதற்கு பொதுமக்கள் மறுப்புத் தெரிவித்துவிட்டனர்.

இந்தச் சூழலில், தனது ராஜினாமா முடிவை திடீரென அறிவித்து லியோ வராத்கர் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளார்.

# ஜனநாயகக் கட்சிக்கு ஆதரளிக்கும் யூதர்கள் இஸ்ரேலை வெறுக்கிறார்கள் என அர்த்தம்!

## டொனால்ட் டிரம்ப் பேச்சால் சர்ச்சை

அமெரிக்க முன்னாள் அதிபரும் இந்தாண்டு அதிபர் தேர்தலில் குடியரசுக் கட்சியின் வேட்பாளராகக் கருதப்படுபவருமான டொனால்ட் டிரம்ப், யூதர்கள் யாரெல்லாம் ஜனநாயகக் கட்சிக்கு ஆதரவளிக்கிறார்களோ அவர்கள் இஸ்ரேலை வெறுக்கிறார்கள் எனத் தெரிவித்தது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

காஸாவில் இஸ்ரேலின் தாக்குதலால் பலி எண்ணிக்கை அதிகரித்து வருகிறது. இதனால் இஸ்ரேல் பிரதமர் நெதன்யாகுவை ஜனநாயகக் கட்சியினர் அடிக்கடி விமர்சிப்பது குறித்து ட்ரம்பிடம் கேள்வி எழுப்பப்பட்டது.

அதற்குப் பதிலளித்த ட்ரம்ப், அவர்கள் இஸ்ரேலை வெறுக்கிறார்கள் என நினைக்கிறேன். ஜனநாயகக் கட்சி இஸ்ரேலை வெறுக்கிறது, எனத் தெரிவித்தார். மேலும், யூதர்கள் யாரெல்லாம் ஜனநாயகக் கட்சிக்கு வாக்களிக்கிறார்களோ, அவர்கள் தங்கள் மதத்தை வெறுக்கிறார்கள். அவர்கள் இஸ்ரேலைப் பற்றிய அனைத்தையும் வெறுக்கிறார்கள். இஸ்ரேல் அழிவதைக் குறித்து அவர்கள் வெட்கப்பட வேண்டும், எனத் தெரிவித்தார்.

பெரும்பாலான அமெரிக்க யூதர்கள் ஜனநாயகக் கட்சியினராகக் கருதப்படும் நிலையில் டிரம்பின் இந்தக் கருத்து உடனடியாக ஜனநாயகக்




கட்சியினராலும் யூத தலைவர்களாலும் விமர்சிக்கப்பட்டுள்ளது.

பைடனின் அரசியல் பிரசார முகமை, இங்கு வெட்கப்பட வேண்டிய ஒரே ஆள் ட்ரம்ப்தான். இந்த நவம்பரிலும் தோற்கப் போவது ட்ரம்ப் மட்டும்தான். அமெரிக்கர்கள் ட்ரம்பின் வெறுப்புப் பிரசாரம், தனிநபர் தாக்குதல்கள், அதிதீவிர முன்னெடுப்புகளை வெறுக்கிறார்கள், எனத் தெரிவித்துள்ளது.

# சம்மாந்துறையில் வெள்ளத்தால் பாதிப்புற்றோருக்கு நிதியுதவி



(சர்ஜுன் லாபீர்)

வறுமை என்பது எமக்கான உறுமைச் சீட்டு அல்ல. அதிலிருந்து வறுமைக்குட்பட்டவர்கள் நிரந்தரமாக நீங்குவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும், என்று சம்மாந்துறை பிரதேச செயலாளர் எஸ்.எல் முஹம்மது ஹனீபா தெரிவித்தார்.

அண்மைய வெள்ளத்தினால் நேரடியாகவும் மறைமுகமாகவும் பாதிக்கப்பட்ட வறுமைக்குட்பட்ட மக்களுக்காக இலங்கை செஞ்சிலுவைச் சங்கத்தின் அனுசரணையில் சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் வெள்ளத்தினால் பாதிப்புற்று தெரிவு செய்யப்பட்ட சுமார் 400 குடும்பங்களுக்கு தலா 20,000 ரூபாய் நிதி உதவி வழங்கும் நிகழ்வு நேற்று (20) அனர்த்த நிவாரண சேவைகள் உத்தியோகத்தர் எம்.எஸ்.எம் அஸாருத்தீன் தலைமையில் பிரதேச செயலக கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந் நிகழ்விற்கு பிரதம அதிதியாக கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்

இன்றைய உலகில் பிறப்பில் ஏழ்மையில் வாழ்ந்தவர்கள்தான் அதிகமானோர் பணக்காரர்களாக உருவாகியுள்ளார்கள். ஏனெனில் அவர்களுக்கு ஏழ்மையின் தன்மை புரியும். அதனால்தான் அவர்கள் முன்னேறிச் செல்கின்றார்கள்.

அது போல் நீங்களும் எதிர்காலத்தில் முன்னேற வேண்டும் என்பதோடு ஏனையவர்களுக்கு இடம் கொடுத்து முன்னேற்றமடையவேண்டும் என்றும் அவர் சுட்டிக் காட்டினார்.

மேலும், இன்றைய காலத்தில் குறிப்பாக வறுமைக்குட்பட்ட சிறுவர்களில் அதிகமானோர் போதைப்பொருள் பாவனைக்கு அடிமையாக்கியுள்ளார்கள். எனவே அச்சிறுவர்களின் எதிர்காலத்தை கருத்திற் கொண்டு அவர்களை நற் பிரஜைகளாக மாற்ற நாம் முயற்சி எடுக்க வேண்டும் எனவும் குறிப்பிட்டார்.

இந்நிகழ்வில் நிர்வாக கிராம உத்தியோகத்தர் எம்.எல்.எம் தாஸீம், சம்மாந்துறை பொதுச் சுகாதார மேற்பார்வை பரிசோதகர் ஜே.பஹிலான், கிராம சேவ கர்கள் மற்றும் செஞ்சிலுவை அமைப்பின் அதிகாரிகள் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.

# நிந்தவூர் ஆதார வைத்திய சாலையில் ஆண்கள் விடுதி புனர்நிர்மாணம்

(நூருல் ஹுதா உமர்)

நிந்தவூர் ஆதார வைத்திய சாலையில் நீண்ட நாட்களாக பல்வேறு இட நெருக்கடிகளுக்கு மத்தியிலும் குறைந்த வசதிகளுடனும் இயங்கி வந்த ஆண்கள் விடுதி தற்பொழுது புனர்நிர்மாணம் செய்யப்பட்டு புதிய இடத்தில் இயங்கி வருகின்றது.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் திருமதி எஸ். ஆர். இஸ்ஸதீன் அவர்களின் ஆலோசனை மற்றும் வழிகாட்டலின் கீழ் நிந்தவூர் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகர் டொக்டர் எம்.பி.அப்துல் வாஜித் அவர்களின் நேரடி மேற்பார்வையிலும் விடுதியின் பொறுப்புத் தாதிய உத்தியோகத்தர் திருமதி எம்.வை. பாயிகா அவர்களின் நேரடி வழிகாட்டலிலும் இந்நிகழ்வு இடம் பெற்றது.

இப்புனர்நிரமாணவேலையானதுவைத்தியசாலையின் பொது வைத்திய நிபுணர் டொக்டர் எம்.என்.எம். யூசுப், வைத்தியசாலையின் பிடிஓ கே.எம்.றபீக்,



அல் அஸ்ரக்கியன் 98 அமைப்பின் உறுப்பினர்கள், ரெயின்போ பிரிண்டர்ஸ் உரிமையாளர், மற்றும் எம்.வை.பாரிஸ், நலன்விரும்பிகள், வைத்தியர்கள், தாதியர்கள் என பல்வேறு தரப்பினரின் பொருளாதார மற்றும் சரீர உதவியுடனும் வைத்தியசாலையின் உத்தியோகத்தர், ஊழியர்களின் முழுமையான பங்களிப்புடனும் இடம்பெற்றது.

# கற்பிட்டி வர்த்தக சங்கத்தின் புதிய நிர்வாகக் குழு தெரிவு



(கற்பிட்டி எம்.எச்.எம் சியாஜ்)

கற்பிட்டி நகர வர்த்தகர்களை மையமாக கொண்டு செயற்படும்கற்பிட்டி வர்த்தக சங்கத்தின் பொதுக் கூட்டம் அண்மையில் கற்பிட்டி பஸார் ஜும்ஆ பள்ளி வாசலில் இடம் பெற்றது, இதில் நடப்பாண்டிற்கான புதிய நிர்வாக உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

புதிய தலைவராக எஸ்.ஏ.எம். றியாத் , செயலாளர் எஸ்.ஏ சராஜ், உப தலைவராக பீ. பிரகாஷ், பொருளாளராக பீ. எம் பைனாஸ், உப செயலாளராக எம்.என்.எம் அர்ஷாத், கணக்காய்வாளராக எஸ்.ஏ.எம் நியாஸ்தீன் ஆகியோருடன் மேலும் 10 நிர்வாகக்குழு உறுப்பினர்களும் தெரிவு செய்யப்பட்டனர்.

நிர்வாகக் குழு உறுப்பினர்களாக, எம். றசிம், ஏ.சீ.ஏ .சபூர், எம்.ஏ.எம்.ஏ பௌகான், எம்.ஆர்.எம் சப்ராஸ், ஏ.ஜீ. அஸ்வர் அலி, ஐ.எம்.சிப்ரான், டபிள்யூ. ரவிசந்ரன், எம்.ஏ எம் சப்ராஸ், எம்.ஏ.எம் . முஆத், எம். என். நௌபீர், ஆகியோரும் ஆலோசகர்களாக ஏ.ஆர். எம் முஸம்மில், இக்பால், ஏ.எம். ரஸ்மி, எஸ். எம்.சப்ரான், டி.எம் ரசாத், எம்.என்.எம் மஹீன் ஆகியொரும், ஊடக செயற்பாட்டாளராக எம். ஆர்.எம் இர்பானும் தெரிவு செய்யப்பட்டனர்.

கூட்டத்தில், கற்பிட்டி பிரதேச வர்த்தகர்களின் நலன்களைக் கருத்தில் கொண்டும் வர்த்தகர்களின் உரிமைகளையும் பாதுகாப்பையும் உறுதிப்படுத்துவதுடன் சகல வர்த்தகர்களையும் ஒன்றிணைத்துக் கொண்டு ஒற்றுமையாக பயணிப்பதற்கு சகல அங்கத்துவர்களும் ஒத்துழைப்பு வழங்குவதாகவும் ஏகமனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.



# மலையகத்தில் ஏற்படுத்தப்படும் காட்டுத் தீயினால் கடுமையான சுற்றாடல் பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன

## சுற்றுச்சூழல் ஆர்வலர்கள் கவலை தெரிவிப்பு

மத்திய மலை நாட்டுப் பிரதேசங்களில் நாளுக்கு நாள் அதிகரித்து வரும் காட்டுத் தீயினால் இப்பகுதிகளில் கடுமையான சுற்றாடல் அழிவுகள் இடம்பெற்று வருவதுடன் ஏக்கர் கணக்கிலான வனப்பகுதிகளும் அழிவடைந்து வருவதாக சுற்றுச்சூழல் ஆர்வலர்களால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தற்போது ஹட்டன், வட்டவளை, ரொசெல்ல, நோர்வூட், பொகவந்தலாவ, மஸ்கெலியா, நல்லதண்ணி, ஷெனன் போன்ற பிரதேசங்களில் ஏற்பட்ட காட்டுத் தீயினால் அப்பகுதிகளில் அதிகளவான காடுகள் மற்றும் புதர்க்காடுகள் அழிக்கப்பட்டுள்ளதாகவும் அவர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

காடுகளில் வசிக்கும் முயல் , மான், முள்ளம்பன்றி போன்ற விலங்குகளை வேட்டையாடும் நோக்கில் அப்பகுதியைச்சேர்ந்த சிலரால்ஏற்படுத்தப்படும்இவ்வாறான காட்டுத் தீயினால், இப்பகுதிகளில் பாரியளவில் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் ஏற்பட்டு வருவதுடன், வனப்பகுதிகளில் உள்ள நீர் ஆதாரங்கள் வறண்டுள்ளதுடன் இப்பகுதிகளுக்கு நீர் வழங்கும் நீர்த்தேக்கங்களின் நீர்மட்டமும் வேகமாக வீழ்ச்சியடைந்து, இப்பகுதி மக்களும் தண்ணீர் பற்றாக்குறையை எதிர்நோக்கியுள்ளனர் எனவும் மேற்படி சுற்றுச் சூழல் ஆர்வலர்களால் மேலும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (ரெம-65)

# இந்தியாவிலிருந்து 42 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்வதற்கு அமைச்சரவை அனுமதி



எதிர்வரும் பண்டிகைக் காலத்தை முன்னிட்டு இந்தியாவிலிருந்து 42 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய அமைச்சரவை அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

முன்னதாக நடந்த அமைச்சரவை கூட்டத்தில், ஏப்ரல் 30 ஆம் திகதி வரை முட்டை இறக்குமதி செய்ய முடிவு செய்யப்பட்டிருந்தது. அதற்கமைய இதுவரை 18 மில்லியன் முட்டைகள் இறக்குமதி செய்யப்பட்டுள்ள போதிலும், பண்டிகைக் காலத்திற்காக அதிகளவு முட்டை இருப்புக்கள் தேவைப்படுவதாக இனங்காணப்பட்டுள்ளது.

அதற்கமையவே 42 மில்லியன் முட்டைகளை இறக்குமதி செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும், நுகர்வோருக்கு சலுகை விலையில் முட்டைகளை வழங்குமுகவாகவே அமைச்சரவை இதற்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ரெம-66)

# சீன பிரஜையிடம் பாச்சா பலிக்கவில்லை! பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநீக்கம்

அதிவேக நெடுஞ்சாலையில் வாகனம் செலுத்திய சீன பிரஜை ஒருவரிடம் நூறு அமெரிக்க டொலர்களை இலஞ்சமாகப் பெற்றுக்கொண்ட குற்றச்சாட்டில் பின்னதுவ அதிவேக வீதியில் கடமையாற்றும் பொலிஸ் சார்ஜன்ட் ஒருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாக சிரேஷ்ட பொலிஸ் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சீனர் ஓட்டிச் சென்ற வாகனத்தைத் தடுத்து நிறுத்திய மேற்படி பொலிஸ் சார்ஜன்ட், அவர் வாகனத்தை அதிவேகமாக ஓட்டிச்சென்றதாக குற்றம் சாட்டியுள்ளதுடன், வழக்குத் தொடராமல் இருப்பதற்கு லஞ்சம் கேட்டுள்ளதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது.

அதன்போது தன்னிடமிருந்த நூறு அமெரிக்க டொலர்களை மேற்படி இந்த சீன நாட்டவர் பொலிஸ் சார்ஜன்ட்டிடம் கொடுத்துள்ளார். அதன் பின்னர், அதிவேக நெடுஞ்சாலையில் கடமையிலிருந்த மற்றுமொரு உயர் பொலிஸ் அதிகாரியிடம் நடந்த சம்பவம் குறித்து புகார் செய்தார். இதற்கமையவே குறித்த பொலிஸ் சார்ஜன்ட் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளார். (ரெம-63)




# கடந்த இரண்டு மாதங்களில் மாத்திரம் இலஞ்சம், ஊழல் தொடர்பில் 810 புகார்கள்

இலஞ்சம் மற்றும் ஊழல் தொடர்பில் கடந்த இரண்டு மாதங்களில் 810 முறைப்பாடுகள் கிடைக்கப்பெற்றுள்ளதாக இலஞ்சம் அல்லது ஊழல் குற்றச்சாட்டு விசாரணை ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

பெரும்பாலான புகார்கள் ஊழல் தொடர்பானவை எனவும் அந்த புகார்களின் எண்ணிக்கை 167 எனவும், இதற்கு மேலதிகமாக இலஞ்சம் தொடர்பில் 53 முறைப்பாடுகளும், சட்ட விரோதமாக சொத்துக்களைப் பெற்றமை தொடர்பாக 25 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளதாக ஆணைக்குழுவின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

இவை தொடர்பான சோதனைகளின் போது கைதாகியோரில் 12 பேர் அரச ஊழியர்கள் எனவும், அவர்களில் 6 பேர் காவல்துறை அதிகாரிகள் எனவும் மேற்படி பேச்சாளர் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ரெம-67)

# விழுது சஞ்சிகையின் முதல் நூல் வெளியீடு



(சம்மாந்துறை தில்சாத் பர்வீஸ்)

விழுது சஞ்சிகையின் முதலாவது நூலான "ஸஹ்று ரமழான்" சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு நேற்று (20) திராசத்துல் இஸ்லாமிய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

யாழ் பல்கலைக்கழக மாணவனும் அறிவிப்பாளரும் எழுத்தாளரும் ஊடகவியலாளரும் ஹய் டீவி தமிழ் முகநூல் தொலைக்காட்சியின் பணிப்பாளருமான அகமட் கபீர் ஹஷான் அஹமட் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மட் ஹனிபா கலந்து கொண்டிருந்தார்.

இந்நிகழ்வுக்கு சிறப்பு அதீதியாக மாவட்ட உளவளதுணை ஆலோசகர் மனூஸ் அபுபக்கர், சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய ஆசிரியர் எம்.ஆர்.பௌஸான் அஹமட், முஸ்லிம் கலாசார உத்தியோகத்தர் ஏ.எம்.ஆரிப், சஞ்சிகையின் சிரேஷ்ட ஆலோசகர் ரிப்கான் (நளீமி), சம்மாந்துறை முஸ்லிம் மத்திய மஹா வித்தியாலய ஆசிரியரும் சட்ட இளமாணியுமான ஹாதிக் இப்ராஹிம், சஞ்சிகையின் இணை ஆசிரியர்களான வவுனியா பல்கலைக்கழக மாணவன் ஜப்பார் ரோஷன் அக்தர், சம்மாந்துறை அல் அஷ்ஹர் பாடசாலையின் ஆசிரியர் ஏ.பீ.எம்.அஜ்வத் அவர்களும் ஊடகவியலாளர்கள், எழுத்தாளர்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

நிகழ்வில் சஞ்சிகை அறிமுக உரையினை தொடர்ந்து இணையாசிரியர்கள் பிரதம ஆசிரியரிடம் சஞ்சிகையினை கையளிக்க பிரதம ஆசிரியரால் சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் பிரதேச செயலாளர் எஸ்.எல்.முஹம்மட் ஹனிபாவுக்கு சஞ்சிகையின் முதற் பிரதி வழங்கி வைக்கபட்டது.

நிகழ்வுக்கு வருகை தந்திருந்த அதிதிகளுக்கும் சஞ்சிகையின் ஆசிரியர்களால் சஞ்சிகையின் பிரதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

இறுதியாக சிறப்புரையினை திராசத்துல் இஸ்லாமியா அரபுக் கலாசாலையின் சிரேஷ்ட விரிவுரையாளர் அஸ்மதுல்லாஹ்(தப்லீகி) வழங்கி இருந்தார்.




## அட்டாளைச்சேனையில் ரமலான் பொதி வழங்கல்



(எம்.எப்.நவாஸ்)

அட்டாளைச்சேனை பிரதேச செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தினால் அதன் அனைத்து நலன்புரி சங்க உறுப்பினர்களுக்கும் ரமழான் அன்பளிப்பு பொதி வழங்கி வைக்கும் நிகழ்வு நலன்புரி சங்க தலைவர் பிரதேச செயலாளர் பிரிஎம். இர்பான் தலைமையில் இன்று ஆரம்பித்து வைக்கப்பட்டது.

இந்நிகழ்வில் நலன்புரி சங்க பிரதி தலைவர் உதவி பிரதேச செயலாளர் எப். நஹீஜா முஷாபிர், நலன்புரி சங்க செயலாளர் எம். ஜௌபர் மற்றும் நலன்புரி சங்க பொருளாளர் கே.எம். கபீர் ஆகியோர் கலந்து கொண்டு நலன்புரி சங்க உறுப்பினர்களுக்கு ரமழான் அன்பளிப்பு பொதிகளை வழங்கி வைத்தனர்.

## நாவிதன்வெளி கலாசார அதிகார சபைக்கு புதிய நிருவாகம் தெரிவு



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

நாவிதன்வெளி பிரதேச செயலக கலாசார அதிகார சபையின் புதிய நிர்வாகத் தெரிவு கலாசார மத்திய நிலையத்தில் அண்மையில்நடைபெற்றது. இதன்போது நிர்வாக சபை உறுப்பினர்கள் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் - ஆர்.ராகுலநாயகி (நாவிதன்வெளி பிரதேச செயலக செயலாளர்), உப தலைவர் - எம்.என். பௌசர், செயலாளர் - பா.ஜனுராஜ், உப செயலாளர் - எம் . சகாயமலர், பொருளாளர் - என் .பிருந்தா, ஒருங்கிணைப்பாளர் -ஏ.எல்.எம் .ஷினாஸ் (கலாசார அபிவிருத்தி உத்தியோகத்தர்), ஆலோசனைக் குழு -

எஸ்.செல்வசிகாமணி, ஏ.எம் .அபூபக்கர், உத்தியோகபூர்வ அங்கத்துவம் - கே.பி . மனோஜ் இந்திரஜித் (கிராம நிர்வாக உத்தியோகத்தர்) ஆகியோர் தெரிவாகியுள்ளனர்.

## புதிய சமுர்த்திப் பணிப்பாளர் அம்பாறையில் பொறுப்பேற்பு



(அஸ்ஹர் ஆதம்)

அம்பாறை மாவட்டத்தின் புதிய சமுர்த்திப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள அட்டாளைச்சேனையின் முன்னாள் பிரதேச செயலாளர் எம்.ஏ.சி.அகமட் ஸாபீர் கடந்த செவ்வாய்க்கிழமை, மாவட்ட செயலகத்தில் தனது கடமைகளை மாவட்ட செயலாளர் சிந்தக அபேவிக்ரம முன்னிலையில் பொறுப்பேற்றுக்கொண்டார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 21.03.2024 இல் வெளியிடப்பெற்றது.